DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

*******

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| CC. No. | 798/2023 |
| Prosecution: | அ.சா.2 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | தினேஷ் |
| **Father Name** | ~ | மேகநாதன் |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of Dt.06.8.2025.**

**முதல் விசாரணை**

நான் தாம்பரத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது கம்ப்யூட்டர் சர்வீஸ் செய்து வருகிறேன். கடந்த 16.1.2023 அன்று குரோம்பேட்டை பகுதியில் கம்ப்யூட்டர் சர்வீஸ் கொடுததுவிட்டு பாலாஜி பவனில் சாப்பிட்டு விடடு நான் வெளியே வந்து நின்று கொண்டிருந்த போது மாலை 3.30-4.30 க்குள்ளாக காக்கி நிற சேலையில் ஆக்டிவா இருசக்கர வாகனத்தில் பெண்மணி ஒருவர் குரோம்பேட்டை- தாம்பரம் மார்க்கமாக ஓட்டி சென்று கொண்டிருந்தார். அவருக்கு பின்னால் பாலத்திலிருந்து குரோம்பேட்டை -தாம்பரம் மார்க்கமாக அதிவேகமாக வந்த மாருதி கார் ஒன்று இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது. இருசக்கர வாகனத்தை ஓட்டிய பெண்மணி தலைகுப்புற கீழே விழுந்தார்.

நான் அதை நேரில் பார்த்தேன். காரின் பதிவு எண். TN 14 F 5537 ஆகும். இருசக்கர வாகனத்தின் பதிவு எண். TN 11 AR 9762 ஆகும். சம்பவத்திற்கு காரணமான

காரின் ஓட்டுநர் தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார். (எதிரி ஆஜர்). அதன் பின்னர் விபத்தில் காயமடைந்த நபர் ஷீலா என தெரிய வந்தது. 2 நாட்கள் கழித்து அவர் உயிரிழந்து விட்டதா தகவல் தெரிய வந்தது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் VPM computers என்ற பெயரில் computer service செய்யும் வேலை செய்து வருகிறேன். எந்த தேதியில் எதற்காக குரோம்பேட்டை சென்றேன் என்றால் 16.1.2023 அன்று மாலை 3 முதல் 4 மணி அளவில் computer service செய்ய சென்றேன். மேற்படி சர்வீஸ் செய்ய சென்ற இடத்தில் தொகை பெற்றேனா என்றால் G pay மூலமாக தொகை பெற்றேன். எவ்வளவு சர்வீஸ் தொகை பெற்றேன் என்றால் ரூ.15000/— பெற்றேன். மேற்படி computer service முடிந்த பின்பு எங்கு சென்றேன் என்றால் பாலாஜி பவன் சென்று சாப்பிட்டு விட்டு பின்பு வீட்டிற்கு சென்றேன்.

மேற்படி பாலாஜி பவனில் சாப்பிட்டதற்கான பில் என்னிடம் உள்ளதா என்றால் பில் கொடுத்தார்களா என்று எனக்கு நினைவில்லை. பாலாஜி பவனில் எந்த முறையில் தொகை செலுத்தினேன் என்றால் பணமாக செலுத்தினேன். எவ்வளவு செலுத்தினேன் என்று எனக்கு நினைவில்லை. சாப்பிட்டு முடித்தவுடன் வீட்டிற்கு சென்றேனா என்றால் இல்லை. விபத்தை பார்த்துவிட்டு தான் சென்றேன். வண்டி எங்கிருந்து எந்த திசையில் வந்தது என்றால் மாருதி காரானது மேம்பாலத்தில் இருந்து தாம்பரம் நோக்கி வந்தது. இருசக்கர வாகனத்தில் வந்த நபர் எங்கிருந்து வந்தார் என்றால் பல்லாவரத்தில் இருந்து குரோம்பேட்டை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

மேற்படி இருசக்கர வாகனத்தை காரின் எந்த பகுதி இடித்தது என்றால் காரின் வலது புறம் இடித்தது. இருசக்கர வாகனம் ஓட்டி வந்த நபர் ரோட்டின் எந்த பகுதியில் விழுந்தார் என்றால் சாலையில் நடுப்பகுதியில் விழுந்தார். இருசக்கர வாகனம் ஓட்டி வந்த நபர் கார் இடித்தவுடன் விழுந்துவிட்டாரா என்றால் 50 அடி தூரம் தள்ளி சென்று விழுந்தார். நான் முதல் விசாரணையில் கார் மோதியவுடனே இருசக்கர வாகனத்தில் விழுந்து விட்டதாக சொல்லிவிட்டு தற்போது 50 அடி தூரம் தள்ளி சென்று விழுந்ததாக முரண்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி கார்

மோதி உடனே இருசக்கர வாகனத்தில் இருந்த நபர் விழுந்ததாக வீடியோ பதிவுகள் உள்ளது என்றாலும் நான் பார்க்காத சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் போலிசார் விசாரணையில் வழக்கு சம்பவம் 18.1.2023 அன்று நடைபெற்றதாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து நடைபெற்ற பின்னிட்டு விபத்து ஏற்படுத்திய கார் சம்பவ இடத்தில் நின்றதா அல்லது சென்று விட்டதா என்றால் சென்று விட்டது.

விபத்தை ஏற்படுத்திய காரின் பதிவு எண் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் விபத்து ஏற்படுத்தி விட்டு கார் சென்று கொண்டிருந்த போது சிக்னலில் அந்த காரை பிடித்து விட்டார்கள். மேற்படி சிக்னல் அருகில் நான் நின்றிருக்கவில்லை என்றால் சரியல்ல. பாலாஜி பவனில் இருந்து நடந்து செல்லும் துூரத்தில் தான் சிக்னல் உள்ளது. சம்பவம் நடைபெற்ற இடத்திற்கும் நான் நின்ற இடத்திற்கும் 20 முதல் 30 அடி துூரம் இருக்கும். நான் போலிஸ் விசாரணையில் கொடுத்த மறு வாக்குமூலத்திலும் 18.1.2023 மாலை 4 மணிக்கு விபத்து ஏற்பட்டதாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. 16.1.2023 அன்றுதான் விபத்து ஏற்பட்டது. போலிசார் விசாரணையில் 18.1.2023 அன்று மாலை விபத்து ஏற்பட்டதாகவும் 18.1.2023 அன்று காலை 3.50 மணிக்கு விபத்தில் காயம்பட்ட ஷீலா ஜெபமணி என்பவர் இறந்து விட்டதாக முரண்பட்டு வாக்குமூலம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

நான் முதல் விசாரணையில் சொன்னது போல் விபத்து நடைபெற்ற சமயத்தில் நான் computer service பணிக்கு செல்லவில்லை என்றாலும் பாலாஜி பவனில் செல்லவில்லை என்றாலும் வழக்கு விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க இவ்வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S/d C.P.Mullaivanan
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.